[1992 ஜனவரி 30

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடம் கிடைத்துவிட்டது என்ற விவரம் இங்கே எனக்குத் தரப்படவில்லை. அந்த இடம் கிடைத்து இருந்தாலும் நீதிபதியை நியமிப்பது ஹைகோர்ட்டிலே இருக்கின்ற பதிவாளர் அவர்களைப் பொறுத்து இருக்கிறது. அவர்களும் சீக்கிரம் நியமிப்பார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 6. டாக்டர் பீட்ரிக்-டி. சோசா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

6—

ஒலியினால் ஏற்படும் சுகாதாரக்கேட்டை கண்காணிக்க நடவடிக்கை.

* 4364—டாக்டர் பீட்ரிக் டி'சோசா:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நகரப் பகுதியில் ஒலியினால் ஏற்படும் சுகாதாரக்கேடு கண்காணிக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சென்னைப் பெருநகர் பகுதியில் ஒலியினால் ஏற்படும் சுகாதாரக்கேடு சம்பந்தமாக தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அவ்வப்போது குறிப்பிட்ட இடங்களில் தேவையான ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது.

Thirumathi BEATRIX D'SOUZA: Honourable Speaker Sir, Japan and Singapore are the two Countries which monitor and control noise pollution. While 'O' on the measurement scale indicates the least perceptible sound, '130' on the decibal scale reaches pain level and can result not only in physical damage but in mental stress and trauma. Noise pollution not only affects the echo system

but also the human system. My question is how noise-free or silent road—which are supposed to be maintained near hospitals and Schools—are maintained and how effective are the controls, if any, on the loud speaker menace?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஜப்பானைப் போலவோ, சிங்கப்பூரைப் போலவோ நாம் செய்ய வேண்டுமென்று சொன்னால் அது சுலபமாக இல்லாத் தாப்பு, மக்களின் ஒத்துழைப்பும் அந்த அளவிற்கு இருந்தால், அதைச் செய்வதற்கான வாய்ப்புகள் ஏற்படலாம். ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரை, குறிப்பாக நம்முடைய சென்னை மாநகரம் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு இருக்கிறது. ஒன்று தொழிற்சாலைப் பகுதி (Industrial area) அடுத்தது வர்த்தகப் பகுதி (Commercial area) அடுத்தது குடியிருப்புப் பகுதி (Residential area) அடுத்தது அமைதிப் பகுதி—இப்படி நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு இடத்திலேயும் எந்த அளவிற்கு அந்த சவுண்ட் இருக்கலாம் என்பதை அளவு எடுத்து அவர்கள் குறிப்பிட்டு நமக்குக் கொடுத்து இருக்கிறார்கள்; வரன்முறைப்படுத்தி இருக்கிறார்கள். அந்த வரன்முறைக்குள்ளே அதை நிறுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அது மூன்று விதமாகப் பிரிக்கப்பட்டு இருக்கிறது. ஒன்று தொழிற்சாலை சம்பந்தப்பட்டது; அதை மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் பார்க்கிறது. அடுத்தது சாலைப் போக்குவரத்து, வாகனங்களால் ஏற்படும் சத்தம் இவைகளை எல்லாம் காவல் துறை கவனிக்கிறது. இப்படி அவர்கள் கவனித்து நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே இந்த குறித்த அளவிற்குள் கொண்டுவந்து 'நாய்ஸ் பொல்யூஷன்' இல்லாமல் தடுப்பதற்கு சம்பந்தப்பட்ட துறை துரிதமான நடவடிக்கை மேற்கொண்டு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 7. திரு. கி. தர்மலிங்கம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.